அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# வள்ளலார் சன்மார்க்க ஞானமுரசு

விளம்பி ஆண்டு ஐப்பசி–கார்த்திகை நவம்பர் 2018 முரசு 12 ஒலி 137



அருட்பெரும் கடலே ஆனந்த நறவே
அடிநடு அந்தமும் கடந்த
தெருட்பெரு மலையே திருஅண்ணாமலையில்
திகழ்சுயம் ஜோதியே சிவனே
மருட்பெருங் கடலின் மயங்குகின்றேன்
என் மயக்கெலாம் ஒழிந்து வன்பிறவி
இருட்பெரும் கடல் விட்டு ஏற நின் கோயிற்கு
எளியனேன் வர வரம் அருளே. – திருஅருட்பா

## திருக்கார்த்திகை தீபத் திருவிழா அழைப்பிதழ் உள்ளே...

பிரதி ஒன்றுக்கு ரூ. 10/– ஆண்டு சந்தா ரூ. 120/–

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# திருகார்த்திகை தீப திருவிழா அழைப்பிதழ்



அன்புள்ளம் கொண்ட ஆன்மநேய அன்பர்கள் அனைவருக்கும் வந்தனம்! நினைத்தாலே முக்தி தரும் திருஅருணை அருணாச்சல திருத்தலத்தில் லட்சோபலட்சம் பக்தர்கள் கூடி தரிசனம் செய்கின்ற தீப திருநாளினை முன்னிட்டு நமது திருவண்ணாமலை சன்மார்க்க சங்கத்தில் வெகு விமரிசையாக மஹாஅன்னதானம், சாதுக்கள் சத்சங்கம் மற்றும் திருஅருட்பா இசை கச்சேரி ஆகிய நிகழ்ச்சிகள் அடங்கிய பெருவிழாவிற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தாங்கள் அனைவரும் வருகை தந்து தொண்டில் பங்கேற்று குருவருளையும் திருவருளையும் பெற்று வாழ்வாங்கு வாழ அன்புடன் அழைக்கின்றோம்.

நவம்பர் 23 2018

**நாள்: 23.11.2018 வெள்ளிக்கிழமை**

**இடம்: சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம், திருவண்ணாமலை.**



**திருஅருட்பா**

**திருவண்ணாமலைப் பதிகம் (2497)**

அருட்பெருங்கடலே ஆனந்த நறவே
அடிநடு அந்தமும் கடந்த
தெருட்பெரு மலையே திருஅண்ணா மலையில்
திகழ்சுயஞ் ஜோதியே சிவனே
மருட்பெருங் கடலின் மயங்குகின்றேன் என்
மயக்கெலாம் ஒழிந்து வன்பிறவி
இருட்பெருங் கடல்விட்டு ஏறநின்
கோயிற்கு எளியனேன் வலவரம் அருளே.

**அன்பர்களை இந்த சத்சங்க விழாவின் அறப்பணிகளுக்கு தங்களால் இயன்ற நன்கொடையை அளித்துப் புண்ணிய கைங்கரியத்தில் பங்குகொண்டு உய்யுமாறு வேண்டுகிறோம்.**

1) மஹா அன்னதானம் 5,000 நபர்களுக்கு ---------- ரூ. 1,50,000/-
2) பிரசாதம் --- கேசரி 30கிலோ ---------- ரூ. 10,000/-
சுக்கு காபி 10,000 நபர்களுக்கு ---------- ரூ. 15,000/-
3) திருஅருட்பா இலவச புத்தகம் 20,000 நபர்களுக்கு ---------- ரூ. 25,000/-
4) சொற்பொழிவாளர்கள் மற்றும் இசை கலைஞர்களுக்கு ---------- ரூ. 40,000/-
5) பந்தல் மற்றும் ஒலி, ஒளி அமைப்பிற்கு ---------- ரூ. 40,000/-
6) 10 விழாநாட்களிலும் 1 நாள் அன்னதானத்திற்கு ---------- ரூ. 6,500/-

**அன்பர்கள் தங்கள் நன்கொடைகளை அறக்கட்டளையின் வங்கிக் கணக்கான**

Account details:- Bank: HDFC Bank Ltd,
Name: Arutperunjothi Vallalar Charitable Trust,
A/C.No: **08761450000048**, Branch: Tiruvannamalai,
IFSC Code: HDFC0000876 ல் அளிக்கவும்.

அழைத்து மகிழும்: *அருள்திரு பாபு சாது* தொடர்புக்கு: **+91 88385 40176**



# திருச்செவிக்கு விண்ணப்பம்

### திருஅருட்பா பக்திப் பாமாலை

## திருப்பள்ளி எழுச்சி

ஒருமையில் உலகெலாம் ஓங்குக எனவே;
ஊதின சின்னங்கள் ஊதின சங்கம்;
பெருமைகொள் சமரச சுத்த சன்மார்க்கப்
பெரும்புகழ் பேசினர்; பெரியவர் சூழ்ந்தார்;
அருமையும் எளிமையும் ஆகி அன்றாகி
அம்பலத்தே சித்தி ஆடல்செய் பதியே;
இருமையும் அளித்தஎன் அருட்பெருஞ்ஜோதி
என்ஐயனே; பள்ளி எழுந்து அருள்வாயே.

## முறையிட்ட பத்து

மக்கட்பிறவி எடுத்தும் உனை வழுத்தாக்
கொடிய மரம் அனையேன்;
துக்கக் கடலில்வீழ்ந்து மனம் சோர்கின்றேன்;
ஓர் துணை காணேன்;
செக்கர்ப் பொருவு வடிவேல்கைத் தேவே;
தெவிட்டாத் தெள்ளமுதே;
முக்கண் கரும்பின் முழுமுத்தே;
முறையோ முறையோ முறையேயோ.

## போற்றித் திருப்பதிகம்

மணிமிடற்று அமுதே போற்றி; என்தன்னை
வாழ்விக்க வேண்டுவல் போற்றி
அணிமதி முடியோய் போற்றி; இவ்ஏழைக்கு
அருள்அமுது அருளுக போற்றி;
பணிஅணி புயத்தோய் போற்றி; நின் சீரே
பாடுதல் வேண்டும்நான் போற்றி;
தணிவில் பேரொளியே போற்றி; என்தன்னை
தாங்குக; போற்றி நின்பதமே.

..திருச்சிற்றம்பலம்..

# திருஅருட்பிரகாச வள்ளலார்

**வா**ழையடி வாழையென வந்த திருக்கூட்ட மரபில் அவதரித்த நம் வள்ளல் பெருமானார் இப்பிறப்பில் மட்டுமன்றி முற்பிறப்பிலும் அடியாராகவே விளங்கினார். இதனை பெருமானே தமது அருட்பாவில் பல இடங்களில் பதிவு செய்துள்ளார்.

புதுமையன் அல்லேன் **தொன்று தொட்டு** உனது
பூங்கழற்கு அன்பு பூண்டவன் காண்
புதியன் என்றுஎனைப் போக்குதிரோ நீர்
**பூருவத்தினும்** பொன்னடிக்கு அடிமைப்
பதிய வைத்தனன் ஆயினும் அந்தப்
பழங்கணக்கினைப் பார்ப்பதில் என்னே

அடியனேன் அலன் என்னினும் அடியேன்
ஆக நின்றனன் **அம்மை இம்மை**யினும்

ஏணாதன் என்னினும் யான் **அம்மையின் நின் அடியேன்**
என அறிந்தேன் அறிந்தபின்னர் இதயமலர்ந்தேனே

அம்மை – முற்பிறப்பு. இம்மை – இப்பிறப்பு

நம் வள்ளல் பெருமானாருக்கு இதுவே இறுதிப்பிறப்பு. இனி பிறப்பு இல்லை. இப்பிறப்பிலேயே அடைய வேண்டியனவெல்லாம் அடைந்தார். **அடைய வேண்டியதெல்லாம் இப்பிறப்பிற்றானே அடைந்தனை, அஞ்ச வேண்டாம்** என இறைவனே கூறி அருள் செய்தான் என்றும், இப்பிறப்பையே சிவமாகும் பிறப்பாகச் செய்தருளினான் என்றும் பெருமானே கூறுகின்றார்.

ஐயமுறேல் என்மகனே **இப்பிறப்பிற் றானே**
**அடைவதெலாம் அடைந்தனை** நீ அஞ்சலை என்றருளி
வையமிசைத் தனி இருத்தி மணிமுடியும் சூட்டி
வாழ்கஎன வாழ்த்திஎன் வாழ்க்கை முதற் பொருளே

தீதவத்தைப் **பிறப்பிதுவே சிவமாகும் பிறப்பாச்**
**செய்வித்து** என் அவத்தையெலாம் தீர்த்த பெரும் பொருளே

இவ்விரு வலிய அகச் சான்றுகளால் பெருமானுக்கு இதுவே இறுதிப் பிறப்பு என்பதும், இப்பிறப்பிலேயே அடைய வேண்டிய தெல்லாம் அடைந்தார், சிவமானார் என்பதும் ஐயமின்றிப் பெறப்படும். நம் பெருமானுக்கு இப்பிறப்பு சித்தி பெறுவதற்கென்றே பிறந்த பிறப்பு.

நம் பெருமான் முற்பிறவியிலேயே சரியை கிரியை யோகங்களை முடித்து இப்பிறப்பில் ஞானத்தில் நின்று சித்தி பெறுதற்கென்றே பிறந்த **சாமுசித்தர்.**

ஆன்மாக்களை பிராகிருதர், வைநயிகர், சாமுசித்தர் என மூன்று வகையாகச் சாத்திரம் கூறுகிறது. **பிராகிருதர்** என்பார் சாமானியர், லௌகிகர், கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று வாழ்பவர். உலகில் பெரும்பாலோர் பிராகிருதரே. **வைநயிகர்** என்பார் வினய சீலர். ஓரளவு பக்குவம் வாய்ந்தவர்கள். **சாமுசித்தர்** என்பார் அதிதீவிர பக்குவிகள். முற்பிறப்பிலேயே சரியை கிரியை யோகங்களை முடித்து இப்பிறப்பில் ஞானியாகவே பிறப்பவர்கள். சாமுசித்தரைப் ‘போத மிகுந்தோர்’ என்றும், பிராகிருதரைப் ‘பேதமைக்கே பொருந்தினோர்’ என்றும், வைநயிகரைக் ‘கதிப்பாற் செல்ல ஏது நெறி எனும் அவர்’ என்றும் அருணந்தி சிவாசாரியர் சித்தியாரில் கூறுவர்.

**போதமிகுத் தோர்தொகுத்த பேதை மைக்கே**
**பொருந்தினோர் இவர்க்கன்றிக் கதிப்பாற் செல்ல**
**ஏதுநெறி எனும்அவர்கட்கு அறிய முன்னாள்**
**இறைவன்அருள் நந்திதனக்கு இயம்ப நந்தி**
**கோதிலருட் சனற்குமா ரற்குக் கூறக்**
**குவலயத்தின் அவ்வழியெங் குருநாதன் கொண்டு**
**தீதகல எமக்களித்த ஞான நூலைத்**
**தேர்ந்துரைப்பன் சிவஞான சித்தி என்றே**

இதற்கு உரை வரையும் சிவாக்கிர யோகிகள் “ஞானாதிகாரியாகிய சாமுசித்தருக்கும், உலக வாழ்வே மெய்யென்றும் தேகமே ஆன்மா என்றும் இருக்கும் பிராகிருத சனங்களுக்கும் அன்றி, மோட்சத்துக்கு ஏது என்னை? என்று சிந்திக்கும் வைநயிகருக்கு அறியும்படி” என்று எழுதுகின்றார்.

மேலும் சாமுசித்தராவார், சாமாநியமான இஷ்டா பூர்த்தாதி தருமங்களுக்குப் பரமான சிவதருமமாகிய சரியை கிரியை யோகம் இயற்றி அதனால் நின்மல அந்தக்கரணராய், அந்தத் தேகம் விட்டும் அந்த ஞானம் கெடாமல் மீளவும் ஜனிக்கும் பொழுதும் அந்த ஞானத்துடனே ஜனித்துச் சிவபாவனை பண்ணுபவர்.

வைநயிகராவார், வினயசீலராய் உலகத்துக்கு உயர்ந்தோர் போதிக்கும் ஞானத்தினாலும், குரு உபதேசத்தினாலும், சிவசாத்திரத்தினாலும், நித்திய அநித்திய வஸ்து விவேகிகளாய் மனம், வாக்கு, காயம் எனும் வியாபாரங்களினால் சர்வ கன்மங்களையும் துடைக்கப் பட்டர்களாகிக் கிரமத்தின் மோட்சத்தை அடைபவர்.

பிராகிருதராவார், பூமியில் ஜனித்து மேற்சொற்பனத்தின் ஞானம்போல் அறிந்து அறியாமல் கிளிஞ்சலை வெள்ளி என்று அறிவது போல விபரீத ஞானியுமாய், அதனாலே தேகாதிகளை ஆன்மா என்றும் பிரகிருதி ஜன்னிய வஸ்துக்களைப் பரமென்றும் எண்ணுபவர் என வரைந்து சாமுசித்தர், வைநயிகர், பிராகிருதராவார் இத்தகையர் என்பதைத் தெளிவாக விளக்குகிறார்.

ஞானசம்பந்தர், வள்ளல் பெருமான் போன்றோர் சாமுசித்தர்கள். அதாது, பிறவி ஞானிகள். இவர்களது இலக்கணத்தைச் சிவாக்கிர யோகிகள், "அந்தத் தேகம் விட்டும் அந்த ஞானம் கெடாமல் மீளவும் ஜனிக்கும் பொழுது" எனக் கூறுவதை உற்று நோக்குக. இவர்கள் முற்பிறப்பில் எவ்வளவு அறிவோடு இறந்தார்களோ அவ்வளவு அறிவோடு இப்பிறப்பில் பிறக்கிறார்கள். இதை "விட்ட குறை தொட்டகுறை இரண்டும் நிறைந்தனன்" என்று நம் வள்ளல் பெருமானார் கூறுகின்றார்.

தத்பதம், துவம்பதம், அசிபதம் ஆகிய முப்பதத்தில் தொம்பத நெறியோர் அடுத்த இரண்டு பிறப்பில் வீடுபெறுவர் என்றும், தத்பத நெறியோர் அடுத்த ஒரு பிறப்பில் வீடு பெறுவர் என்றும், அசிபத நெறியோர் இப்பிறப்பிலேயே வீடு பெறுவர் என்றும் அதுவும் இவ்வுடம்போடு பெறாவிட்டால் இனி ஒரு உடம்பு எடுத்துப் பிறக்கவேண்டியதாகும் என்றும் குமாரதேவர் சுத்த சாதகத்தில் கூறுகின்றார். வள்ளல் பெருமானார் அசிபத நெறியினர். ஆதலின் இப்பிறப்பிலேயே இவ்வுடம்போடு வீடு பெற்றார்.

சொல்லுறும் **அசுத்தத் தொல்லுயிர்**க் கவ்வகை
அல்லலில் காத்தருள் அருட்பெருஞ்ஜோதி

**சுத்தமும் அசுத்தமும் தோய்உயிர்**க்கு இருமையின்
அத்தகை காத்தருள் அருட்பெருஞ்ஜோதி

வாய்ந்திடும் **சுத்த வகைஉயிர்**க்கு ஒருமையின்
ஆய்ந்துறக் காத்தருள் அருட்பெருஞ்ஜோதி

குமார தேவரைப் போன்று வள்ளல் பெருமானும் மேற்கண்ட அகவல் வரிகளில் உயிர்களின் தன்மையையும் அவற்றை இறைவன் காத்தருளும் திறத்தையும் விளக்குகின்றார். அதாவது, அசுத்த உயிர்க்கு அவ்வகை – அதற்கேற்பக் காலாந்திரத்தில், அதாவது, பல பிறவிகளில்; சுத்தா சுத்த உயிர்க்கு இருமையில் – இரண்டு பிறப்பில்; சுத்த உயிர்க்கு ஒருமையில் – ஒரே பிறப்பில், அதாவது இப்பிறப்பிலேயே என்று கொள்ளலாம். இதனின்று வள்ளல் பெருமான் சுத்தவகை உயிர் என்பதையும், பெருமானை

இறைவன் ஒருமையிலேயே (இப்பிறப்பிலேயே) காத்தருளினான் என்பதையும் கூறவும் வேண்டுமோ? இதுகாறும் கண்டவற்றால் பெருமானுக்கு இதுவே இறுதிப் பிறப்பு என்பது உறுதியாகும்.

ஞானிகளுக்கு பிறப்பிலேயே நல்ல உடம்பும் நல்ல குடிப்பிறப்பும் இயல்பாகவே அமையும். வள்ளல் பெருமான் புலால் மறுத்த பரம்பரையில் பிறந்ததில் ஒரு சிறப்பும் உண்டு. புலால் உண்ணாத பெற்றோர்களுக்குப் பிள்ளையாகப் பிறந்ததனால் பிறவியிலேயே, கருவிலேயே உடம்பு சத்துவ உடம்பாக இருக்கும்.

மனித உடம்பு அசுத்த மாயா தத்துவங்களால் ஆனது. இதிலுள்ள ஒவ்வோர் அணுவும் அருளொளியால் வேதிக்கப்பட்டு சுத்த மாயா தத்துவ உடம்பாகி, அருள் உடம்பாதலே சுத்த, பிரணவ, ஞான தேக சித்தியாம். வள்ளல் பெருமான் இவ்வாறு அருளுடம்பு பெற்றார். தான் பெற்ற அருளுடம்பின் ஆற்றலை வள்ளல் பெருமான் இரு பாடலில் அழகாகவும் அழுத்தமாகவும் கூறியருளுகின்றார்.

**ஆராலும் அறிந்து கொளற்கு அரியபெரும் பொருளே**
**அம்மேஎன் அப்பாஎன் ஐயாஎன் அரசே**
**காராலும் கனலாலும் காற்றாலும் ககனக்**
**கலையாலும் கதிராலும் கடலாலும் கடல்சூழ்**
**பாராலும் படையாலும் பிறவாலும் தடுக்கப்**
**படுதலிலாத் தனிவடிவம் எனக்களித்த பதியே**
**சீராலும் குணத்தாலும் சிறந்தவர்சேர் ஞான**
**சித்திபுரத் தமுதேஎன் நித்திரை தீர்ந் ததுவே.**

கனலால் (நெருப்பால்) வள்ளல் பெருமானுடைய உடம்பு ஊறுபடுத்தப் பெறவில்லை என்பதற்குச் சமரச பஜனை ச.மு கந்தசாமி பிள்ளை ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பிடுகிறார். பெருமானார் சித்திவளாகத் திருவறையில் அடிக்கடி பிரமதண்டிகா யோகம் செய்து வருங்கால் இருபக்கத்திலும் இருப்புச் சட்டியில் சீமைக்கரி எரிந்து கொண்டிருப்பது வழக்கம். ஒருநாள் குருக்கள் உள்ளே திடீரென நுழைய, அவர் கால்கள் பட்டு இருப்புச் சட்டியிலுள்ள நெருப்பு பக்கங்களில் சிதறிக் குருக்கள் மீதும் வள்ளலார் மீதும் விழுந்தன. விழுந்தும் வள்ளலார் திருமேனிக்கு ஒரு மாசும் வரவில்லை. குருக்களுக்கு விரல்களில் புண் பட்டது. இதனால் பெருமானார் தேகம் சுத்த தேகம் என்பது புலனாகிறது.

மேலும், ஒருநாள் மாலையில் பெருமழை பெய்தபோது வெளியில் வர, கூடியிருந்தவர் வத்திரங்கள் முற்றும் நனைந்தன. ஆனால் நம் பெருமானார் மீது ஒரு துளியும் படவில்லை.

*அதுமட்டுமல்லாது, சுத்ததேகம் பெற்றவர் கரத்தில் பஞ்ச லோகங்களை வைத்தால் உருகிவிடும் என்பதைக் கேள்விப்பட்ட சித்தர் ஒருவர் வள்ளல் பெருமானாரை இதன் உண்மை கேட்க, உடனே ஒரு வெள்ளித் துண்டை எடுத்துக் கரத்தில் தாங்கி அழுத்தினவுடன் அத்துண்டு நீராய் உருகி ஓடிற்று. இவ்வளவு உஷ்ணமுள்ள உடம்பின்மீது மழைத் துளியும் விழுமோ? அணுகுமுன்னே ஆவியாகி விடாதோ? காராலும், கனலாலும் பெருமானார் உடம்பு ஊறுசெய்ய இயலவில்லை என்பதற்கு இவை சான்றுகள். அருளுடம்பின் ஆற்றலை இன்னும் எவ்வளவோ கூறலாம். விரிக்கிற் பெருகும் என விடுத்தோம். ஜீவகாருண்ய ஒழுக்கத்தில் பேரின்ப லாபத்தை அடைந்தவரது தேகசித்தி ஆற்றலை வள்ளல் பெருமான் கூறியிருப்பதை காண்க.*

*மரணம் கைம்மை என்றும், மரணமிலாப் பெருவாழ்வு மங்கலம் என்றும் வள்ளல் பெருமான் கூறுகின்றார்.*

**மெய்ம்மையே கிடைத்த மெய்மையே ஞான**
**விளக்கமே விளக்கத்தின் வியப்பே**
**கைம்மையே தவிர்த்து மங்கலம் அளித்த**
**கருணையே கரிசிலாக் களிப்பே**
**ஐம்மையே அதற்குள் அதுவதுவாகும்**
**அற்புதக் காட்சியே எனது**
**பொய்மையே பொறுத்துப் புகலளித்துஅருளிப்**
**பொதுநடம் புரிகின்ற பொருளே.**

**கைம்மை** – *கணவரை இழந்த நிலை; விதவை.*

**மங்கலம்** – *நன்மை, இனிய வாழ்வு.*

*மங்கலம் என்ப மனைமாட்சி என்கிறது திருக்குறள்.* **“கைம்மையே தவிர்த்து மங்கலம் அளித்த கருணையே”** *என்பது திருஅருட்பா. அதாவது, மரணத்தைத் தவிர்த்து மரணமிலாப் பெருவாழ்வை அளித்த கருணைக் கடவுளே என்பது பொருள்.*

*வள்ளல் பெருமானின் உடம்பு பிணமாக விழவில்லை. மண்ணுக்கோ நெருப்புக்கோ இரையாகவில்லை. தகனம் இல்லை. சமாதியும் இல்லை. பெருமானார் தம் உடம்பை அருளுருவாகச் செய்து கொண்டு அருட்பெருஞ்ஜோதி மயமானார். தாமிருந்த சித்திவளாகத் திருமாளிகையில் 1874ஆம் வருடம் ஜனவரி மாதம் 30ஆம் நாள் வெள்ளிக் கிழமை இரவு 12 மணிக்கு பூசதினத்தன்று திருவரைக்குள் புகுந்து உடம்போடு அருட்பெருஞ்ஜோதி மயமானார்.*

## மூத்தோர்சொல் அமிர்தம்

முன்னொரு காலத்தல் அரபு நாட்டின் அரசர் மாமூன் என்பவர் வந்தவர்களுக்கு இல்லை என்று சொல்லாது வாரி வழங்கும் வள்ளலாக விளங்கினார். உலகெங்கும் அவர் புகழ் பரவி இருந்தது.

அவர் நாட்டு எல்லையில் பெரிய பாலைவனம் ஒன்று இருந்தது. அங்கே ஒரேவொரு குளம்தான் இருந்தது. ஆண்டிற்கு ஒருமுறைதான் அங்கு மழை பெய்யும். அந்தக் குளத்தின் நீர் பழுப்பு நிறமாகவும், குடிப்பதற்கு இயலாத கசப்பாகவும் இருந்தது. அங்கே இருந்தவர்களுக்குத் தலைவனாக போதேவின் என்பவன் இருந்தான். வேறு வழி இல்லாத அவர்கள் அந்த நீரைக் குடித்தே வாழ்ந்தனர்.

அந்தப் பகுதியில் தொடர்ந்து சில ஆண்டுகளாக மழையே பெய்யவில்லை. கடுமையான வறட்சி நிலவியது. அரசரைக் கண்டு அவர் உதவி பெற்றுத் திரும்பலாம் என்று நினைத்தான் போதோவின். அதனால் தலைநகரை நோக்கிப் புறப்பட்டான்.

பல நாட்கள் பயணத்திற்குப்பின் வழியில் குளம் ஒன்றைக் கண்டான். அதன் நீரைச் சுவை பார்த்தான். 'ஆ! என்ன சுவை! தேவர் உலக அமுதமும் இவ்வளவு சுவையாக இருக்காதே. என் நல்ல காலம்தான் இந்தக் குளம் என் கண்ணில் பட்டது. இந்தச் சுவையான நீரையே அரசருக்குப் பரிசாக எடுத்துச் செல்வேன். மகிழ்ச்சி அடையும் அவர் நான் கேட்கும் பரிசைத் தருவார்' என்று நினைத்தான்.

தான் கொண்டு வந்திருந்த தோல் பையில் அந்த நீரை எடுத்துக் கொண்டான். அருகில் இருந்த காட்டிற்கு வேட்டையாட அரசர் தன் பரிவாரங்களுடன் வந்திருந்தார். அங்கேயே கூடாரம் அடித்துத் தங்கி இருந்தார். இதை அறிந்த போதோவின் அரசர் தங்கியிருந்த இடத்தை அடைந்து அவரை வணங்கினான்.

அவனை வரவேற்ற அரசர், "வறுமையில் வாடியதைப் போலக் காட்சி அளிக்கிறாயே. எங்கிருந்து வருகிறாய்?" என்று அன்புடன் கேட்டார்.

"உங்கள் அருளை நாடி பாலைவனப் பகுதியிலிருந்து வருகிறேன்" என்று கூறிவிட்டு, "அரசே! உங்களுக்கு அமுதம் போன்ற சுவையான நீரைப் பரிசாகக் கொண்டு வந்திருக்கிறேன். இத்தகைய இனிப்பான நீரை உங்கள் வாழ்நாளில் எப்போதுமே சுவைத்திருக்க முடியாது. இதை தயவு கூர்ந்து ஏற்றுக் கொள்ளுங்கள்" என்றான் போதோவின்.

அரசரும், "அப்படியா? எங்கே அந்த நீரைக் கொடு" என்றார். தன் தோளில் கிடந்த தோல் பையை அரசனின் முன் வைத்தான் போதோவின்.

அதில் இருந்து சிறிதளவு தண்ணீரை எடுத்துக் குடித்துவிட்டு, "நீ சொல்வது உண்மைதான். இப்படிப்பட்ட நீரை நான் இதுவரை குடித்ததே இல்லை. இத்தகைய அரிய பொருளைக் கொண்டு வந்த உனக்கு என்ன பரிசு வேண்டும்? எதுவானாலும் தயங்காமல் கேள். மகிழ்ச்சியுடன் தருகிறேன்" என்றார் அரசர்.

அதற்கு போதோவின், "அரசே! நான் தண்ணீர் கொண்டு வந்த தோல்பை நிறைய தங்கக் காசுகளை நிரப்பித் தாருங்கள்" என்றான்.

தன் அருகில் இருந்த ஏவலர்களைப் பார்த்து அவர், "அந்தத் தோல் பையில் இருக்கும் தண்ணீரை ஒரு பாத்திரத்தில் ஊற்றிப் பாதுகாப்பாக வையுங்கள். அந்தப் பையைப் பொற்காசுகளால் நிரப்புங்கள்" என்று கட்டளையிட்டார். ஏவலர்களும் அப்படியே செய்தனர்.

இப்போது அரசர் போதோவினைப் பார்த்து, "நீ வந்த வழியே திரும்ப வேண்டும். நாட்டிற்குள் நுழையக் கூடாது. அப்படிச் செய்வதாக இருந்தால் நீ கேட்ட இந்தப் பரிசை உனக்குத் தருவேன்" என்றார்.

போதோவின், "நாட்டிற்குள் நுழைந்து நான் என்ன செய்யப் போகிறேன்? அரசராகிய உங்களைச் சந்திப்பதற்கு வந்தேன். என் எண்ணம் நிறைவேறிவிட்டது. மகிழ்ச்சியுடன் நான் மீண்டும் பாலைவனம் செல்கிறேன்" என்று அவரை வணங்கி தங்கக் காசுகள் நிரப்பப்பட்ட பையை எடுத்துக் கொண்டு புறப்பட்டான்.

அரசரின் இச்செயல் அங்கிருந்த எல்லோருக்கும் வியப்பைத் தந்தது. ஆர்வத்தை அடக்க முடியாத அமைச்சர், "அரசே! எதற்காக அவனை நாட்டிற்குள் நுழைய வேண்டாம் என்று திருப்பி அனுப்பினீர்கள்? இதுபோல யாரிடமும் நீங்கள் நடந்து கொண்டது இல்லையே" என்று கேட்டார்.

அதற்கு அரசர், "அமைச்சரே! அவன் பரிசாகக் கொண்டு வந்திருந்த நீரைச் சுவைத்தேன். அதில் எந்தச் சுவையும் இல்லை. கசப்பு நீரையே குடித்துப் பழகிய அவனுக்கு அந்த நீர் மிகச் சுவையாக இருந்தது. கிடைத்தற்கு அரிய பொருள் என்று கருதி பரிசாகவும் கொண்டு வந்திருந்தான். நம் நாட்டிற்குள் அவன் நுழைந்தால் அங்குள்ள நீர் நிலைகளில் தண்ணீரைக் குடிப்பான். சுவையான அந்த நீரைக் குடித்தவுடன் அவனுக்கு உண்மை விளங்கும்.

எவ்வளவு அற்பமான பொருளை அரசனுக்குப் பரிசாக வழங்கினோம் என்று அவன் உள்ளம் வருந்தும்.

அவன் உள்ளம் வருந்தக் கூடாது. பெருமிதத்துடன் அவன் செல்ல வேண்டும் என்பதற்காகத்தான் அப்படியொரு வேண்டுகோளை வைத்தேன்" என்று விளக்கினார்.

**முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு**
**இறைஎன்று வைக்கப் படும். – குறள்**

நடுநிலையாக நின்று ஆட்சி செய்து மக்களைக் காப்பாற்றும் அரசனை மக்கள் இறைவனாகப் போற்றுவர்.

**திருச்சிற்றம்பலம்**

# அடிமுடி தேடல்

**உண்மை விளக்கம்**

பூத்திடும் அவனும் காத்திடுபவனும்
விலங்குருக்கொடு நேடி
ஏத்திடும் முடியும் கூத்திடும் அடியும்
இன்னமும் காண்கிலர் என்றும்
கோத்திடும் அடியர் மாலையின்
அளவில் குலவினை என்றுநல்லோர்கள்
சாற்றிடும் அதுகேட்டு வந்தனன்
நினது சந்நிதி உறஎனக்கு அருளே.

**திருஅருட்பா**



பிரம்மா அன்னமாகவும், விஷ்ணு வராகமாகவும் உருவங் கொண்டார் என்பதன் பொரள்: பாச அறிவும், பசு அறிவுமாம்.

ஒரு பொருளைக் காணுந் தன்மையுடையது பாச அறிவு. பொறி புலன்களாலே அறியப்பட்டது. பசு அறிவாவது ஜீவ அறிவு.

**மலத்தில் அழுந்துவது பாசம். பகுத்தறிவது பசு.**

மேலும் கீழும் செல்லுதலால், பாதாளத்திலும் ஆகாசத்திலும் தேடினார் எனச் சொன்னது. மேலும், ஒவ்வொரு வஸ்துவிலும் பதி, பசு, பாச லக்ஷணம் உண்டு.

**திருச்சிற்றம்பலம்**

Owned, Published & Edited by S. Mahendrababu
from Vallalar Sathya Dharmasalai, Mountain Roundway,
Thiruvannamalai Tk. & Dt. - 606 603.
and Printed by J. Radha at Subam Printers
39/1, Kosamada Street, Tiruvannamalai - 606 601.

## ஞான சரியை

தயவுதிரு அருட்பா அருணாசலம் அவர்கள் எழுதிய
உத்தமர்தம் உறவு என்ற நூலிலிருந்து

மனிதன் விலங்குகளிடமிருந்து வேறுபட்டவன். எப்போதெனில், பகுத்தறிவினால் சிந்தித்து செயல்படும்போது மட்டுமே.

இப்பிரபஞ்சம் எந்த அளவிற்கு பரந்து விரிந்து அளவிடற்கு அரியதாய் உள்ளது என்ற உண்மையை ஓரளவிற்கு அறிய முடியும். இத்தகைய பிரபஞ்சத்தை இயக்கும் இயற்கை வடிவினனாகிய அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் அருளாற்றல் எத்தகையது. இத்தகைய உலக இயக்கங்களுக்கு எல்லாம் கருவாய் கர்த்தாவாய் விளங்கும் பேரருளாளராகிய இறைவனின் திருவருளைப் பெறவேண்டுமாயின் எத்தகைய முயற்சியும், பயிற்சியும் அயராத உழைப்பும் தேவைப்படுகிறது என்பதை சிந்தித்துப் பார்த்து செயலாற்றினால் நமக்கு நன்மை கிடைக்கும்.

விண்வெளிப் பயணத்திற்கு செல்லும் ஒருவருக்கு எப்படிப்பட்ட பயிற்சிகள் அளிக்கபடுகின்றன என்று தெரியுமா? உணவு முறை பழக்கப்படுத்தப்படுகின்றது; வெளியில் (Space) எப்படி நடக்க வேண்டும் என்பது கற்றுத்தரப்படுகின்றது; அதற்குத்தக்க ஆடை அணிவிக்கப்படுகின்றது; முக்கியமாக உடல் மற்றும் மன ஆரோக்கிய நிலை கண்காணிக்கப்படுகின்றது.

விண்வெளிப் பயணத்திற்கே இப்படி என்றால் பழமையான வேதங்களாலும், படைக்கும் பிரம்மாவாலும், காக்கும் திருமாலாலும் அடைவதற்கரிதாகிய எல்லாம் வல்ல அருட்பெருஞ்ஜோதி இறைவனின் அருளைப் பெறுவதற்கு எப்படிப்பட்ட பயிற்சியும் முயற்சியும் தேவை என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். இதற்கு முதலில் நாம் தற்போது எந்த நிலையில் இருக்கிறோம் என்பதை தெரிந்து கொள்வது மிக முக்கியம். இதை பட்டினத்தடிகள் மிகத் தெளிவாக அருளியுள்ளார்.

**அழுக்குடைப் புலன்வழி இழுக்கத்தின் ஒழுகி**
**வளைவாய்த் தூண்டிலின் உள்இரை விழுங்கும்**
**பன்மீன் போலவும்,**
**மின்னுபு விளக்கத்து விட்டில் போலவும்**
**வீசிய மணத்தின் வண்டு போலவும்**
**உறுவது உணராச் செறுவுழிச் சேர்ந்தனை**

*அதாவது, காட்டில் ஒருவகை ஓசை எழும். அவ்வோசையைக் கேட்பதில் மான்களுக்கு அலாதிப் பிரியம்.*

*தனிமையில் அவ்வோசையைக் கேட்டுத் தன்னை மறந்து நிற்கும். அச்சமயம் இவைகளை எதிரிகள் அடித்துத் தின்றுவிடுகின்றன.*

*ஆண் யானையோ தன் இணையான பெண் யானையைக் கண்டால் அதுவும் தன்னை மறந்து உரசிக்கொண்டே செல்லும். சிங்கமோ புலியோ இந்த நிலையில் யானைகளைப் பார்த்தால் எளிதில் அவற்றை அடித்து இரையாக்கிவிடும்.*

*காட்சி இன்பம் ஒன்றே விட்டில் பூச்சிகளுக்கு. ஒளியை நாடி விளக்கைத் தேடும் விட்டில் பூச்சிகள் அதில் விழுந்து மாண்டு போகின்றன.*

*நீரில் வாழும் மீன்கள் அங்கு எதைக் கண்டாலும் கொத்தித் தின்பதற்கு முயற்சிக்கும். தூண்டில் முள்ளில் உள்ள மண்புழுவை இரை என்று எண்ணி ஓடிவந்து கொத்தும். இதனால் தூண்டில் முள்ளில் சிக்கி உயிர்விடுகின்றது.*

*தாமரையில் தேனெடுக்கச் செல்லும் வண்டு அம்மலரின் நறுமணத்தில் மயங்கிக் கிடக்கும். மாலைப் பொழுதில் தாமரை தன் இதழ்களை மூடிக்கொள்ளும். மயங்கிய நிலையில் இருக்கும் வண்டு அதிற்கிடந்து மாண்டு போகும்.*

*இவ்வாறு ஒரு புலனுக்கு அடிமையான ஜீவராசிகளே அந்த ஒருவழிப் புலன் இன்பத்தை அனுபவிப்பதால் அழிகின்றன என்றால் மனிதன் ஐம்புலன்களுக்கும் அடிமைப்பட்டவன். ஐம்புலன்கள் வழியேயும் இன்பத்தை அனுபவிக்க ஆசை கொள்கின்றான். ஒரு புலன்வழி இன்பமே உயிருக்கு உலை வைக்கிறது என்றால், ஐம்புலன் வழியேயும் இன்பம் காணத் துடிக்கும் விந்தையான மனிதனின் நிலை என்னவாகும்? இதைப் பற்றி நம் வள்ளல் பெருமானார் தமது திருஅருட்பாவில் அருளியதாவது,*

**ஊட்டுகின்ற வல்வினையாம் உட்கயிற்றால் உள்ளிருந்தே**
**ஆட்டுகின்ற நீதான் அறிந்திலையோ – வாட்டுகின்ற**
**அஞ்சுபுல வேடர்க்கு அறிவைப் பறிகொடுத்துஎன்**
**நெஞ்சு புலர்ந்து ஏங்கு நிலை.**

*இங்கு ஐம்புலன்களை வேடர்கள் என்கின்றார். வேடர்கள் உயிர் இரக்கம் அற்ற கொலைத் தொழிலைச் செய்பவர்கள். இப்புலன்வழி இன்பமும், இன்பம் கொடுப்பதுபோல் இருந்தாலும் உயிருக்கு நஞ்சையே கொடுக்கின்றது.*

*மேலும் பட்டினத்தடிகள்,*

**ஆங்காரப் பொக்கிசம் கோபக் களஞ்சியம் ஆணவந்தான்**
**நீங்கா அரண்மனை பொய்வைத்தகூடம் விண்நீடிவளர்**
**தேங்கார் பெருமதில் காமவிலாசம் இத்தேகம் கந்தல்**
**பாங்காய் உனைப் பணிந்து எப்படி ஞானம் பலிப்பதுவே**

*ஆங்காரம், கோபம், ஆணவம், பொய், காமம் இவ்வளவு தேவையற்ற தன்மைகள் நம்மிடம் மலைபோல் குவிந்துள்ளன. இவை நம்மைவிட்டு நீங்க வேண்டும். நம் வள்ளல் பெருமானார் இன்னும் தெள்ளத் தெளிவாகக் கீழ்க்காணும்படி விளக்குகின்றார்.*

**காமஉட்பகைவனும்; கோபவெங் கொடியனும்;**
**கனலோப முழுமூடனும்; கடுமோக வீணனும்;**
**கொடுமதமெனும் துட்ட கண்கெட்ட ஆங்காரியும்;**
**ஏமம்அறு மாச்சரிய விழலனும்; கொலைஎன்று**
**இயம்பும் பாதகனுமாம் இவ்வெழுவரும் இவர்க்குற்ற**
**உறவான பேர்களும் எனைப் பற்றிடாமல் அருள்வாய்**

*அதாவது, இறைவன் திருவருளைப் பெறுவதற்குத் தடைக்கற்களாய் இருப்பவை இவ்வேழு குற்றங்கள். எனவே இவ்வேழு குற்றங்களும், அதனோடு தொடர்புடையவர்களிடமும் தனக்குத் தொடர்பு இல்லாமல் செய்யவேண்டும் என வேண்டுகின்றார்.*

*மேற்கண்ட ஏழும் மனத்தின் கூறுபாடுகளே. இம்மனக்குரங்கை நம்மால் வசப்படுத்த முடியுமா என்றால் முடியாது. இறைவனின் அருளுக்கு மட்டுமே அது கட்டுப்படும். இதை நம் பெருமானார் கீழ்க்காணும் அருட்பாவில் அருளியுள்ளார்.*

**எளியனேன் சிறியன்யான் செய்பிழைகள் சிறியவோ**
**எழுகடலினும் பெரியவே**
**என்செய்கேன் என்செய்கேன் இனியாயினும் செய்யாது**
**எந்தைநினை ஏத்தஎன்றால்**
**வளியின்வான் சுழல்கின்ற பஞ்சாக நெஞ்சால்**
**மயங்குகின்றேன் அடியனேன்**
**மனம்எனது வசமாக நினது வசம் நானாக**
**வந்து அறிவுதந்து அருளுவாய்** *எனவும்*
**சூரிட்ட நடையில் என்போரிட்ட மனதைநான்**
**சொல்லிட்டமுடன் அணைத்துத்**
**துன்றிட்ட மோனமெனும் நன்றிட்ட அமுதுண்டு**
**சும்மா இருத்தி என்றால்**

**காரிட்டதற்கு முன் யாரிட்ட சாபமோ**
**கண்டிலேன் அம்மம்ம**
**ஓர்கணமேனும் நில்லாது பொல்லாது புவியில்**
**கறங்கெனச் சுழல்கின்றதே**
**தாரிட்ட நீ அருள் சீர்இட்டிடாய் எனில்**
**தாழ்பிறவி தன்னில் அதுதான்**
**தன்னை வீழ்த்துவதன்றி என்னையும் வீழ்த்தும்** என்றும் பாடியுள்ளார்.

இவ்விதம் காணும்போது இறைவனை வேண்டி அவனருள் அடைந்தால் மனம் நம் வசப்படும். அது வசமாகும்போது ஏழு அழுக்குகளும் நமை விட்டு நீங்கும். அவை நீங்கவே நாம் புலன் வழி செல்லுதல் தடைபடும். இதனால் நாம் இன்பமாக வாழ முடியும்.

அங்ஙனமாயின், இறைவன் யார்? அவர் எங்கே உரைகிறார்? எவ்விதம் வழிபடுவது? என்ற வினாக்களுக்கு விடைகாண வேண்டியது இன்றியமையாதது.

**உலகநிலை முழுதாகி ஆங்காங்குஉள்ள உயிராகி**
**உயிர்க்குயிராம் ஒளிதானாகி**
**கலகநிலை அறியாத காட்சியாகி கதியாகி**
**மெய்ஞானக் கண்ணதாகி**
**இலகு சிதாகாசமதாய் பரமாகாச**
**இயல்பாகி இணையொன்றும் இல்லாதாகி**
**அலகில் அறிவானந்தமாகிச் சச்சிதானந்த**
**மயமாகி அமர்ந்த தேவே**

நமது வள்ளல் பெருமானார், இறைவனின் முழுமையான தன்மையை, இயல்பு நிலையை, அருள் நிலையை, ஒப்பற்ற ஆற்றலை, அண்டபிண்டம் அனைத்திலும் அணுவுக்கணுவாய் அப்பாலுக்கப்பாலாய் நீக்கமற நிறைந்து விளங்கும் இணையற்ற தன்மையை, அளவிடமுடியாத மெய்யறிவாகிய ஆனந்த வடிவாய் அமைந்து நிற்கும் பேரின்பப் பெருநிலையை இப்பாடல் ஒன்றின் மூலமே வெளிப்படுத்தியுள்ளார்.

கோடி கோடியாய் மக்கள் கோயில்களில் கூடி வழிபாடு செய்கின்றனர். சுவாமி தரிசனம் அற்புதம் என்று மகிழ்கின்றனர். ஆனால் ஓர் உண்மையைப் புரிந்து கொள்வதில்லை. கோயில் என்பது இறைவனை நினைப்பதற்கும், போற்றிப் புகழ்ந்து பாடுதற்குமான இடமேயன்றி வேறில்லை.

*தெளிவாகச் சொல்லவேண்டுமானால் அங்கிருக்கும் உருவத்தின் மூலமாக கடவுளை நினைக்கிறோமே அன்றி உண்மையில் கடவுளுக்கு உருவமில்லை.*

*இதை சித்தர் திருமூலர் இன்னும் தெளிவாக விளக்குகின்றார்.*

**மாடத்துளான் அலன் மண்டபத்தான் அலன்**
**கூடத்துளான் அலன் கோயில்உளான் அலன்**
**வேடத்துளான் அலன் வேட்கைவிட்டார் நெஞ்சில்**
**மூடத்துளே நின்று முத்திதந்தான் அன்றே.**

*அதாவது மாடம், கூடம், மண்டபம், கோயில் இங்கெல்லாம் கடவுள் இல்லை. அவர் வேட்கை விட்டார் நெஞ்சத்தில் குடிகொண்டு இருக்கிறார் என்கிறது இத்திருமந்திரம்.*

*இதையே பட்டினத்துச் சுவாமிகளும்,*

**சொல்லிலும் சொல்லின் முடிவிலும் வேதச் சுருதியிலும்**
**அல்லிலும் மாசற்ற ஆகாயந்தன்னிலும் ஆய்ந்து விட்டோர்**
**இல்லிலும் அன்பர் இடத்திலும் ஈசன் இருக்கும் இடம்**
**கல்லிலும் செம்பிலுமோ இருப்பான் எங்கள் கண்ணுதலே**

*எனப் பாடுகின்றார். திருக்கோயில்கள் தோறும் சென்று வழிபாடு நடத்திய பேரருளாளர்களின் அனுபவத்தின் வெளிப்பாடுகள் இவை. நாம் உண்மையை உணர வேண்டும், உண்மை வழிபாட்டைப் புரிந்துகொள்ள வேண்டும், இலவு காத்தக் கிளிபோன்று ஏமார்ந்து விடக்கூடாது என்பதற்காகவே இவற்றை நம் மகான்கள் அருளியுள்ளனர்.*

**ஒன்றெனக் காணும் உணர்ச்சி என்றுறுமோ** *என்றும்*

**சாகாத கல்வியே கல்வி ஒன்றே சிவம்**
**தான்என அறிந்த அறிவே தகும் அறிவு**

*என்ற வரிகள் மூலம் நம் பெருமானார் விளக்குகின்றார்.*

*எல்லாம் பரம்பொருளின் வடிவங்களே எனக் காணும் காட்சி என்று வருமோ என பிரார்த்திப்பதோடு சிவம் ஒன்றே என்றும் கூறியிருப்பது மெய்யறிவின் அனுபவ வெளிப்பாடு. இதில் ஒன்றே சிவம் என்று கூறும் பெருமான், அந்த சிவம் தான்தான் என்று அறியும் அறிவே தகும் அறிவு என்கிறார். இதனை நல்லாத்தூர் சிவப்பிரகாச சுவாமிகளும் உறுதி செய்கிறார்.*

**தன்னைச் சிவம் என்றறிந்தானே அறிந்தான் தன்னை உண்மையாத்**
**தன்னைச் சிவம் என்றறியாதான் அறியான் என்றும் தன் உண்மை**
**தன்னைச் சிவம் என்று அறிவன் அன்றே பாசந்தனை நீப்பன்**
**தன்னை சிவம் என்றறியாதான் தனக்கு பிறப்பே துணையாகும்.**

வேதத்தின் மகாவாக்கியம் 'நீ அதுவாக இருக்கிறாய்' என்கிறது. அதைத்தானே நம் வள்ளல் பெருமானார், ஒன்றே சிவம்; அந்த சிவம் தானே என அறிதலே மெய்யான அறிவு என்கின்றார்.

ஈண்டு தன்னையறிய தனக்கொரு கேடில்லை என்ற திருமந்திரத்தை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். தன்னை அறிந்து இன்பமுற வெண்ணிலாவே ஒரு தந்திரம் நீ சொல்ல வேண்டும் வெண்ணிலாவே என்று நம் பெருமானார் பாடுவதும் தன்னைச் சிவம் என்று அறிவதற்கேயாகும். நீ எந்தப் பொருளை வெளியில் தேடிக்கொண்டிருக்கிறாயோ அந்தப் பொருளாகவே நீ இருக்கிறாய். இதுதான் உண்மை; இவ்வுண்மையை உணரப் பெறுவதே மெய்யறிவு.

**காடுங்கரையும் மனக்குரங்கு கால்விட்டோட அதன்பிறகே**
**ஓடுந்தொழிலால் பயன் உளதோ ஒன்றாய்ப் பலவாய் உயிர்க்குயிராய்**
**ஆடுங்கருணைப் பரஞ்ஜோதி அருளைப் பெறுதற்கு அன்புநிலைத்**
**தேடும் பருவம் இதுகண்டீர் சேரவாரும் செகத்தீரே.**

இவ்வாறு தாயுமானவர் ஒன்றாய்ப் பலவாய் உயிர்க்குயிராய் ஆடும் கருணைப் பரஞ்ஜோதி என இறைவனின் இயல்பை வெளிப்படுத்தியுள்ளார். ஒன்றாய் இருப்பவன் இறைவன். ஒவ்வொரு உயிரிலும் பரவி நிற்கின்றபோது அவனே பலவாய் காட்சி அளிக்கின்றார். ஒவ்வொரு உயிரின் இயக்கத்திற்கும் அவரே கர்த்தாவாய் இருப்பதை ஆடுங் கருணைப் பரஞ்ஜோதி என்கின்றார்.

**'ஆங்காங்குள்ள உயிராகி உயிர்க்குயிராம் ஒளிதானாகி'** என்று பெருமான் கூறியிருக்கும் இறைநிலையும், தாயுமானவர் கூறியிருக்கும் இறைநிலையும் ஒன்றாகவே உள்ளது.

மணிவாசகப் பெருமானும் இதே இறைநிலை உண்மையை **'ஏகன் அனேகன் இறைவன் அடி வாழ்க'** என விளக்கியுள்ளார்.

மணிவாசகர் முதல் வள்ளல் பெருமானார் வரை அனைவருமே இறைவன் ஒருவனே என்று அறுதியிட்டுக் கூறுகின்றனர்.

அனைத்திற்கும் மேலாக இறைவன் சமயம் கடந்தவன். இதை **"பெருகிய பேர்அருளுடையார் அம்பலத்தே நடிக்கும்"** என்ற அருட்பா பாசுரம் அருகர், புத்தர், அரன், அயன், ஆதி, நாராயணன் அனைத்துப் பெயர்களும் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவருக்கே எனத் தெளிவாக விளக்குகின்றது.

கடவுள் என்ற சொல்லே ஆய்ந்து அறிந்த சான்றோர் வாக்கு. கடந்து உள்ளே காணக்கூடிய ஒன்றுதான் கடவுள்.

*அடுத்து முக்கியமாக கடவுள் ஒரு வியாபாரி அல்ல என்பதை புரிந்து கொள்ள வேண்டும். நேர்த்திக்கடன் என்ற பெயரில் ஒன்றைக் கொடுத்துப் பிரிதொன்றைப் பெற முடியாது. இறைவன் வேண்டுதல் வேண்டாமை இல்லாதவன் என்றே திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார். எனவே நாம் அனைவரும் கடவுள் வியாபாரி அல்ல என்பதை முதலில் புரிந்து கொள்ள வேண்டும். இறைவழிபாடு என்பது ஒன்றைக் கொடுத்து பிரிதொன்றைப் பெறும் பண்டமாற்று முறைஅல்ல.*

*இறைவனிடம் படைக்க வேண்டிய பொருளை விடுத்து வேண்டாதவற்றைப் படைத்துக் கொண்டிருக்கிறோம். இவ்வுலகம் முழுவதும் அவரது படைப்பு. அதில் நாம் அவருக்கு படைப்பதற்கு நம்மிடம் என்ன இருக்கிறது?*

*சரி, அத்தகைய இறைவனை, அவர்தம் திருவருளை எவ்வாறு அடையக்கூடுமெனில், 'ஆர்வம் உடையவர் காண்பர் அரன்தன்னை; ஈரம் உடையவர் காண்பார் இணையடி' என்ற திருமூலர் வாக்கு இங்கு கருதற்குரியது.*

**என்பே விறகா இறைச்சி அறுத்திட்டுப்**
**பொன்போல் கனலில் பொரிய வருப்பினும்**
**அன்போடு உருகி அகம் குழைவார்க்கன்றி**
**என்போல் மணியினை எய்தஒண்ணாதே**

**எண்ணாயிரத்தாண்டு யோகம் இருகினும்**
**கண்ணார் அமுதினைக் கண்டறிவார் இல்லை**
**உள்நாடி உள்ளே ஒளிபெற நோக்கினால்**
**கண்ணாடி போலக் கலந்து நின்றானே**

*இவ்விரு திருமந்திரத்தையும் ஒப்பு நோக்கும்போது, நம்முள் இருக்கும் இறைவனிடம் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி உண்மை அன்பால் வழிபாடு செய்ய வேண்டும் என்பது புலனாகிறது.*

*எங்கும் பூரணராகி விளங்கும் ஓர் உண்மைக் கடவுள் உண்டென்றும், அக்கடவுளை உண்மை அன்பால் கருத்தில் கருதி வழிபாடு செய்யின் அக்கடவுள் திருவருள் நமது கருத்தின்கண் வெளிப்பட்டு விளங்கும் என்றும் அத்திருவருள் விளங்கவே மரணம், பிணி, மூப்பு, பயம், துன்பம் முதலிய அவத்தைகள் எல்லாம் நீங்கி பேரின்ப சுகம் அடைதல் கூடும் என்ற வள்ளல் பெருமான் வாக்கும் இங்கு கருதற்குறியது. இவ்விதம் இறை உண்மை உணர்ந்து வழிபாடு செய்து துன்பம் நீங்கி மெய்யின்பம் பெற்று வாழ்வோமாக!*

# திருமந்திரம்

## திருநெறி

திருநெறி ஆவது, சித்து அசித்து அன்றிப்
பெருநெறி ஆய பிரானை நினைந்து
குருநெறியாம் சவமாம் நெறி கூடும்
ஒருநெறி ஒன்றாக வேதாந்தம் ஓதுமே.

*இறைவன் அறிவுடைய பொருள், அறிவிலாத பொருள் என்று சுட்டி அறியப்படாத நிலைமையன். பேருணர்வால் மட்டுமே உணரப்படும் தன்மை கொண்ட அவரை நினைந்து, குருவால் உபதேசிக்கப்பட்டவாறு சிவமாம் தன்மை எய்தும் நெறியே திருநெறி. இஃது ஒன்றே சிறந்த நெறி என்று வேதாந்தம் கூறும்.*

## வேதம் தேட..

கொண்டு அங்கு இருந்தனர் கூத்தன் ஒளியினைக்
கண்ட அங்கு இருந்தனர் காரணத்து உள்ளது
பண்டை மறைகள் பரந்து எங்கும் தேடுமாம்
இன்று என் மனத்துளே இல் அடைந்து ஆளுமே.

*யோகியர் இறைவனை ஜோதி வடிவாய் தரிசித்து வாழ்ந்தனர். அந்த ஜோதியே அனைத்திலும் காரணமாக உள்ளமையைக் கண்டு மகிழ்ந்தனர். ஆனால் பழைய வேதங்களோ, அவ்வனுபூதிப் பொருளை எங்கெங்கும் தேடுகின்றன. அப்பொருள் என் சிந்தையே கோயிலாகக் கொண்டு என்னை ஆட்கொண்டது.*

## பிறப்பு இறப்பு தாண்டார்

அருளில் தலைநின்று, அறிந்து அழுந்தாதார்
அருளில் தலைநில்லார், ஐம்பாசம் நீங்கார்
அருளின் பெருமை அறியார், செறியார்
அருளின் பறந்திட்டு, இறந்து, அறிவாரே.

*அருளில் ஈடுபட்டு, இறைவனைப் பதிஞானத்தால் அறிந்து, அதில் தோய்ந்து அறியாதோர், மேன்மேலும் அவ்வருளில் ஈடுபட்டு வாழார். ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதாயி என்னும் ஐந்து மலங்களினின்றும் விடுபடார். யான் எனது என்ற தற்போதம் ஒடுங்கப் பெறார். இறைவனது பொதுவான அருளினால் பிறந்தும் இறந்தும் மாறி மாறி வருவதையே அறிவார். மாறாத நிலையாகிய வீடுபேற்றை அடையார் என்க.*

திருச்சிற்றம்பலம்

**Advertisement**

## மகாமந்திரம்

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

வடலூர் சித்தி வளாகம் என்கின்ற மேட்டு குப்பத்தில் நடைபெறும் பசி பிணி போக்கும் திரு பணிக்கு உதவ அனுகுவீர்.

திரு. நந்தி சரவணன் ஐயா
9842679999 / 9442327059

திருவருள் துணையுடன்

BNS ∝

# eXS Lending Library

## எக்சஸ் வாடகை நூலகம்

Wings of Wisdom

**Books for All Ages**

| Unlimited Books Starts @ INR 1200/. | |
|---|---|
| Scheme | Books at a Time |
| Super Reader | 10 |
| Book Lover | 5 |
| Elite Reader | 4 |
| Language Reader | 3 |
| Smart Reader | 1 |
| Door Delivery Available* | |

**HABITUAL READER**

# Pay as you take and read, like 10% to 15% on book cost of 15 days.

# % may change based on books popularity, availablity and price

# SOULFUL HOME

### Schemes starts @ INR 2400/=

| Sno | Facilities | Super | Max | Book Max | Mag Max |
|---|---|---|---|---|---|
| 1 | Books | 30 | 15 | 7 | 2 |
| 2 | Magazines | 15 | 10 | 5 | 5 |
| 3 | Scheduled Visits | 12 | 12 | 12 | 24 |
| 4 | Unscheduled Visits | 6 | 6 | 3 | 0 |

**Deposit INR - 500/**



### Key advantages

1. Lifetime membership @ 100% refundable deposit INR 500/=
2. Reading charges starts @10%
3. Hassle free door step service available

| AYYAPPAN THANGAL | VALASARAVAKKAM | PORUR | OMR | VADAPALANI |
|---|---|---|---|---|
| 26792007 | 42105700 | 42107304 | 42863478 | 42642491 |



தலை குனிந்து என்னை பார் .....
தலை நிமிர்ந்து
உன்னை நடக்க வைக்கின்றேன் – புத்தகம்

9444 408 804

# அருட்பெருஞ்ஜோதி அகவல் விளக்கம்

**தவத்திரு ஊரன் அடிகள் உரையிலிருந்து...**

அன்பு உள்ளங்களே!

நம் வள்ளல் பெருமானார் வகுத்த சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய லக்ஷியமே ஆன்மநேய ஒருமைப்பாட்டு உரிமை என்பதே. இந்த உரிமை இருந்தால்தான் ஜீவகாருண்ய ஒழுக்கம் என்கிற மோட்ச வீட்டுத் திறவுகோலை நாம் சம்பாதிக்க முடியும். பின்பு மேல் வீட்டுக் கதவைத் திறந்து உள்ளே புகுந்து எதிரற்ற சுகத்தில் நம்மால் வாழ முடியும். இல்லையானால் மோட்ச வீட்டிற்கு முன்னும் பின்னுமாக ஏறிச் சமீபத்தில் காத்திருந்து மீளவும் அத்திறவுகோலை சம்பாதிக்கத் திரும்ப வேண்டுமே அல்லாது கதவைத் திறந்து உள்ளே புகுந்து இன்பத்தை அடைந்து வாழ முடியாது. இந்த ஆன்ம நேயத்திற்குத் தடையாய் இருப்பது விறுப்பு வெறுப்பு.

நம் பெருமானார் உரைநடைப் பகுதியில் **கோபம்** என்ற தலைப்பில் அருளியதாவது, "காமக் குரோதாதிகள் (விறுப்பு வெறுப்புகள்) முதலிய பெருங்குற்றங்களை அவசியம் நீக்க வேண்டியது. காரணம் என்பது கரண சம்பந்தமுடையது. கரணம் என்பது ஒற்றுமை வேற்றுமை தொழில் தன்மை உடையது" என்பதாம்.

ஆக ஜீவகாருண்ய ஒழுக்கத்தைக் கடைபிடிக்க முக்கியத் தடையாய் இருப்பது விறுப்பும் வெறுப்பும். இதனின்று விடுதலை பெற வேண்டுமாகில் நாம் கீழ்க்காணும் அகவல் வரிகளை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

**உயிரெலாம் பொதுவின் உளம்பட நோக்குக**
**செயிரெலாம் விடுகஎனச் செப்பிய சிவமே (அகவல் - 970)**

| | |
|---|---|
| உயிரெலாம் | - எல்லா உயிர்களையும் |
| பொதுவின் | - பொதுவாக |
| உளம்பட நோக்குக | - உள்ளத்தால் எண்ணி ஒழுகுக |
| செயிர் எலாம் விடுக | - கோபத்தை எல்லாம் விடுக |
| எனச் செப்பிய சிவமே | - எனக் கூறிய சிவபரம்பொருளாகிய அருட்பெருஞ்ஜோதியே |

எல்லா உயிர்களும் கடவுள் இயற்கை உண்மை ஏகதேசங்கள் என்பார் நம் பெருமானார். எனவே, எல்லா உயிர்களையும் பொதுவாக பாவித்தல், தன்னைப்போல் பாவித்தல், தன்னுயிர்போல் பாவித்தல் என்பதே நம் பெருமானாரின் உபதேசம். உயிர்கள் அனைத்தையும் ஒன்றாகக் காண்பதற்குக் கோபம் முதலிய குணங்கள் பெருந்தடைகளாக இருத்தலின் செயிர் எலாம் விடுக என சிவமே கூறியதாக அருளியுள்ளார்.

மேலும், "வெறுப்பு என்பது வேண்டாமை, துவேஷம், இதர வஸ்துவைப் பற்றாதிருத்தல். இந்த வெறுப்பால் இதர வஸ்துவினிடத்தில் துவேஷம் தோன்றி ஜவோபகாரத்தைத் தடை செய்யும்" என்ற வள்ளல் பெருமானாரின் வாக்கும் இங்கு கருதற்குரியது.

அதுமட்டுமல்லாது,

**பயிர்ப்புற கரணப் பரிசுகள் பற்பல**
**உயிர்த்திரள் ஒன்றென உரைத்த மெய்ச்சிவமே (அகவல் - 972)**

என்ற அகவல் வரிகளையும் கருத்தில் கொள்க.

| | |
|---|---|
| பயிர்ப்புறு | - அருவருப்போடும் அசுத்தத்தோடும் செயல்படுகின்ற |
| கரணப்பரிசுகள் | - கருவி கரணங்களின் செயற்பாடுகள் |
| பற்பல | - பற்பல வேறுபாடுகளை உடையன ஆயினும் |
| உயிர்த்திரள் ஒன்று என | - உயிர்க்கூட்டங்கள் ஒன்றுபோல்வன என்று |
| உரைத்த மெய்ச் சிவமே | - கூறிய சிவபரம்பொருளாம் அருட்பெருஞ்ஜோதியே! |

மெய், வாய், கண், மூக்கு, செவி என்பன ஐந்தும் புறக் கருவிகள். மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்பன நான்கும் அகக் கருவிகள். இதையே கரணம் என்பர்.

ஓரறிவு உயிர்களாகிய தாவரங்கள் முதல் ஐந்தறிவு உயிர்களாகிய விலங்குகள் வரை அனைத்து உயிர்களுக்கும் ஐயறிவு உண்டு. ஆறாவது அறிவாகிய மன அறிவு மனித இனத்திற்கே உரியது. மனோகரண விருத்தி அதிகமாக உடைய உயிரினம் மனித இனமே.

ஆனாலும் இவை அறியாமையால் அருவருப்போடும், அசுத்தத்தோடும் செயல்படுகின்றன. இதன் காரணமாக உயிர்குலம் வெவ்வேறாகக் காட்சி அளிக்கிறது. ஆன்ம அறிவு என்கிற கண் அஞ்ஞானத்தினால் ஒளி மழுங்கினபடியாலும், அவைகளுக்கு உபகாரமாகக் கொண்ட மனம் முதலான உபநயனங்களாகிய கண்ணாடிகளும் பிரகாச பிரதிபலிதமில்லாமல் தடிப்புள்ளவைகளாக இருக்கின்றதாலும் இவ்விதம் வெவ்வேறாகக் காட்டுகின்றது. **ஒன்றாகக் காண்பதே காட்சி** என்பது ஔவை வாக்கு. இதுவே ஞானம்.

**உயிருள்யாம் எம்முள் உயிர் இவைஉணர்ந்தே**
**உயிர்நலம் பரவுகஎன்று உரைத்த மெய்ச்சிவமே (அகவல் - 974)**

என்பது அருட்பெருஞ்ஜோதி அகவலின் உயிரான வரிகளாகும்.

“உலக உயிர்களில் எல்லாம் நான் இருக்கின்றேன். அந்தராத்மாவாக இருக்கின்றேன். எல்லா உயிர்களும் எனக்குள் இருக்கின்றன. இதை உணர்ந்து உயிர்நலம் பரவுக!” என்று இறைவனே நம் பெருமானாருக்கு பகருகின்றார். எவ்வளவு அற்புதமான ஒரு தொடர்!

பரவுதல் என்பதற்கு இரண்டு பொருள் உண்டு. ஒன்று பரப்புதல், மற்றொன்று வழிபடுதல். உயிர்களுக்கு நலம் செய்வதே கடவுள் வழிபாடு என்பதையே இவ்வகவல் வரிகள் நமக்கு உணர்த்துகின்றது. உயிர்க்குலமே கடவுள் விளங்கும் ஆலயமாகக் கருதி உயிர்களுக்கு இரங்கி இதம் புரிதல் சுத்த சன்மார்க்கக் கொள்கை.

மாதா, பிதா, குரு, தெய்வம் என்பர் ஆன்றோர். இதற்கிணங்க குருவின் மூலமாக தெய்வ வழிபாடு செய்வதே முறை. குரு இல்லா வித்தை பாழ் என்பது நம் முன்னோர் வழக்கு. எனவே நமது குருமார்களின் அருளை முதலில் பெறவேண்டும். குருவருளால்தான் திருவருள் கிட்டும். அங்ஙனம் குருவருளை எவ்விதம் பெறுவது என்பதையே கீழ்க்காணும் அகவல் வரிகள் நமக்குத் தெள்ளத் தெளிவாக உணர்த்துகின்றது.

**கொல்லா நெறியே குருவருள் நெறியென**
**பல்கால் எனக்குப் பகர்ந்த மெய்ச்சிவமே (அகவல் 968)**

| | | |
|---|---|---|
| கொல்லா நெறியே | - | எந்த உயிரையும் கொல்லாத நெறியே |
| குருவருள் நெறி என | - | குருமார்கள் அருளிய நெறி என்று |
| பல்கால் எனக்கு | - | ஒருமுறை இருமுறை அல்லாது பலமுறை எனக்கு |

பகர்ந்த மெய்ச் சிவமே - கூறி அருளிய உண்மைச் சிவமாகிய அருட்பெருஞ்ஜோதியே!

தமிழகத்தின் பொற்காலம் என்று கூறப்பெறும் சங்க காலத்தில் மக்களிடையே புலால் உணவும், கள் குடியும் மிகுந்து இருந்தன. தமிழ்நாட்டில் முதன்முதலில் இவ்விரண்டையும் கடிந்தவர் தெய்வப்புலவர் திருவள்ளுவரே. ''புலால் மறுத்தல்'', "கொல்லாமை", "கள்ளுண்ணாமை" என்ற மூன்றுக்கும் மூன்று முழு அதிகாரங்களை வகுத்து பத்துப்பத்துக் குறட்பாக்களாக இயற்றி அருளினார்.

முற்காலத்தில் கொலை, புலைகளைக் கடிந்த பெரியோர் இருவர். ஒருவர் மகாவீரர், மற்றொருவர் திருவள்ளுவர். பிற்காலத்தில் அண்மையில் கொலைபுலைகளைக் கடிந்தவர் வள்ளல் பெருமானார் ஒருவரே. இம்மூவரைத் தவிர வேறு யாரும் இவற்றை இவ்வளவு வன்மையாகக் கண்டிக்கவில்லை.

கொலைபுலைகளை அறவே நீத்தலைத் தம் சமயக் கொள்கையாகவே வகுத்தார் வர்த்தமான மகாவீரர். நம் திருஅருட்பிரகாச வள்ளல் பெருமானாரும் தமது சமரச சுத்த சன்மார்க்கத்தின் கொள்கையாகவே வகுத்தார். சமணத்திலும், சன்மார்க்கத்திலும் முதற்கொள்கையாகவும், முக்கிய கொள்கையாகவும், அடிப்படைக் கொள்கையாகவும் விளங்குவது புலால் மறுத்தலே.

ஔவையார் **''நோன்பு என்பதுவே கொன்று தின்னாமை''** என்கிறார்.

**"கொல்லா விரதம் ஒன்று கொண்டவரே நல்லோர் மற்று**

**அல்லாதார் யாரோ அறியேன் பராபரமே"** எனத் தாயுமானவ சுவாமிகள் அருளியுள்ளார். கொல்லா விரதம் கொண்டவர்களை நல்லோர் என்று கூறும் தாயுமானவர், அவ்விரதத்திற்கு மாறானவர்களை இன்னார் என்று சுட்டிச் சொல்லவும் விரும்பவில்லை. யாரோ தெரியவில்லை என்கிறார்.

**"மன்னுயிரைக் கொன்று வதைத்து உண்டு உழலாமல் தன்னுயிர்போல் எண்ணி தவம் முடிப்பது எக்காலம்"** என பத்திரகிரியாரும் அருளியுள்ளார்கள்.

சமுதாயத்தில் இன்றைய நிலையில் வன்முறை ஓங்கியிருக்கக் காரணம் மதுவும் மாமிசமுமே. இவ்விரண்டும் கொலைவெறி அளவிற்கு மக்களைக் கொண்டு சேர்க்கின்றன. இதை ஞானியர் மட்டுமல்லாது அறிஞர்களும் ஒப்புக்கொள்கின்றனர்.

**“மக்கள் சைவ உணவைத் தேர்ந்தெடுப்பது என்பது புனிதமானது. மற்றும் அமைதியைக் கொடுக்க வல்லதாகும்”** *என ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் கூறுகின்றார்.*

**“ஆடு, மாடுகளைக் கொல்லும் கொலைக்களங்கள் இருக்கும் வரை இந்த பூமியில் போர்க்களங்கள் இருக்கத்தான் செய்யும்”** *என ஜார்ஜ் பெர்னாட்ஷா அவர்கள் கூறியிருக்கின்றார்.*

*வித்து, காய், கனிகளில் உயிர் இல்லையா என்ற கேள்வி நமக்குள்ளே எழுகிறதல்லவா? இஃது நியாயம்தான். இதற்கும் நம் வள்ளல் பெருமானார் தெளிவாக பதிலளிக்கின்றார்.*

*“மனிதனின் கை, கால் விரல்களில் உள்ள நகங்களையும், முடிகளையும் வெட்டும்போது எவ்வாறு துன்பம் ஏற்படுவது இல்லையோ அதேபோல் செடி, கொடி, மரம் முதலிய தாவரங்களில் உள்ள வித்து, காய், கனி, கீரை வகைகளை பறித்து உண்ணுவதால் அவைகளுக்கு துன்பம் ஏற்படுவதில்லை. மேலும், அவ்வித்துக்களை நாமே விதைத்து உயிர்விளைவு செய்ய முடியும். இவையாவும் உயிர் வந்து தங்குவதற்கான இடமேயன்றி இவ்வித்து, காய், கனிகளில் உயிர் கிடையாது. மண், நீர், வித்து மூன்றும் சேரும்போதுதான் உயிர் உண்டாவதற்கான சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே, தாவர உணவே மனிதனுக்குச் சிறந்த உணவு” என்கிறார்.*

*மேலும், மிக முக்கியமான கருத்து யாதெனில், “ஒரு ஜீவனைக் கொன்று மற்றொரு ஜீவனுக்கு மாமிசத்தால் பசியாற்றுதல் ஜீவகாருண்ய ஒழுக்கமே அல்லவென்றும், கடவுள் சம்மதமும் அல்லவென்றும், ஜீவகாருண்ய ஒழுக்கத்திற்கு முழு விரோதமென்றும் சத்தியமாக அறியவேண்டும்” எனவும் அறிவுறுத்தியுள்ளார்.*


*புலி, சிங்கம், நாய், பூனை முதலிய உயிர்களுக்கே மாமிச ஆகாரம் சிருஷ்டி நியதி ஆகாரமல்ல. அது பரம்பரை வழக்கத்தால் பெற்ற ஆகாரமாகும். இவைகளே சைவமாக வளரும்போது மனிதர்களாகிய நம்மால் சைவ உணவு உண்டு வாழ முடியாதா?*

*ஆக, கொல்லா விரதத்தைக் கைக்கொண்டு எல்லா உயிர்களையும் தன்னுயிர் என உணர்ந்து தொண்டு செய்து குருவருள் பெற்று அதன்மூலம் திருவருளை அடைந்து எல்லா வளமும், நலமும் அடைந்து இன்புற்று வாழ்வோமாக.*


---

கொலையறியாக் குணத்தோர்நின் அன்பர் எல்லாம்
குணமே செய்து உன்னருள்தான் கூடுகின்றார்
புலைஅறிவேன் நான்ஒருவன் பிழையே செய்து
புலங்கெட்ட விலங்கேபோல் கலங்குகின்றேன் - திருஅருட்பா

---



# தருமம் செய்ய விரும்பும் நெஞ்சங்களுக்கு ஒரு அன்பு வேண்டுகோள்



அன்பர்கள் தங்கள் இல்லங்களில் நடைபெறும் திருமண நாள், பிறந்த நாள் போன்ற தினங்களிலும், இறந்தவர்களின் நினைவு நாள் போன்ற நாட்களிலும் திருவண்ணாமலையில் அமைந்துள்ள நமது வள்ளலார் சத்திய தருமச்சாலையில் அன்னதானம் செய்யலாம். **தங்கள் நன்கொடைக்கு 80G பிரிவின்கீழ் வருமானவரி விலக்கு உண்டு.**

**<u>ஒரு நாளுக்கான அன்னதான நன்கொடை</u>**

| | |
|---|---|
| **காலை உணவிற்கு** | **– ரூ.2,500/–** |
| **மதிய உணவிற்கு** | **– ரூ.6,500/–** |
| **இரவு உணவிற்கு** | **– ரூ.3,500/–** |
| **பௌர்ணமி சிறப்பு அன்னதானத்திற்கு** | **– ரூ.4,000/–** |
| **பசு பராமரிப்பிற்கு (ஒரு பசுவிற்கு/ஒரு மாதத்திற்கு)** | **– ரூ.2,500/–** |
| **அணையா தீபத்திற்கு Oil (5 இடங்களுக்கு)** | **– 15 லிட்டர்** |

**தங்களது அன்னதான நாட்களை முன்கூட்டியே பதிவுசெய்துகொள்ளவும்**

**<u>Please donate - Cheque / DD In favour of</u>**

**Arutperunjothi Vallalar Charitable Trust, Thiruvannamalai**

**<u>Please donate through:</u>**

**HDFC Bank Ltd.,**

**Arutperunjothi Vallalar Charitable Trust, Thiruvannamalai**

**A/c No. : 08761450000048 IFSC Code: HDFC0000876**

**<u>Please send MO to:</u>**

அருள்திரு **பாபு சாது**

**சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்**

552/6A, வாயுலிங்கம் எதிரில், கிரிவலப்பாதை,

கோசாலை கிராமம், அடிஅண்ணாமலை அஞ்சல்,

திருஅண்ணாமலை – 606 604.

செல்: +91 9443489849, +91 9942776351

அன்னதானம் பற்றிய விபரங்களுக்கு:-

**8012680865, 7502026565**

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# திருகார்த்திகை தீப சத்சங்கப் பெருவிழா

## நிகழ்ச்சிகள்:-

**நவம்பர் 2018, 22 & 23 ம் தேதி வியாழன் & வெள்ளி**

**இடம்: வள்ளலார் சன்மார்க்க சங்கம், திருவண்ணாமலை.**

### திருவருட்பா அகவல் பாராயணம்:-

வழங்குபவர்கள்: சன்மார்க்க அன்பர்கள், திருவண்ணாமலை.

### சிறப்பு சத்சங்கம்:-

வழங்குபவர்கள்:

தயவுதிரு. கண்ணன் அடிகளார், சேலம்,
தயவுதிரு. திருமூர்த்தி அவர்கள், திருவண்ணாமலை,
தயவுதிரு. தாமல் கோ. சரவணன் அவர்கள், காஞ்சிபுரம்,
பேராசிரியை தயவுதிருமதி. விசாலாட்சி சுப்பிரமணியம் அவர்கள், சென்னை,
தயவுதிருமதி. பிரபாவதி அம்மையார் அவர்கள், சென்னை,
கோடையிடி புலவர் தயவுதிரு. கங்கை மணிமாறன் அவர்கள், குத்தாலம்,
தயவுதிரு. சுப்பிரமணிய அடிகளார் அவர்கள், நல்லசேவிபுரம்,
தயவுதிரு. சாது ஜானகிராமன் அவர்கள், திருவண்ணாமலை,
தயவுதிரு. சாது சரவணன் அவர்கள், திருவண்ணாமலை,
தயவுதிரு. மு.பா.பாபு அவர்கள், சென்னை,
தயவுதிருமதி. மங்கையர்கரசி அவர்கள், உடுமலைப்பேட்டை,
தயவுதிருமதி. சசிரேகா அவர்கள், உடுமலைப்பேட்டை,
தயவுதிரு. சாது அருண்குமார் அவர்கள், திருவண்ணாமலை,
தயவுதிரு. சந்திரமௌலி அவர்கள், இராணிபேட்டை,
தயவுதிருமதி. ரூபாம்மா அவர்கள், திருவண்ணாமலை,

### திருவருட்பா இசைசத்சங்கம்:-

வழங்குபவர்கள்: தயவுதிரு ஜீவ. சீனுவாசன் அவர்கள், திருக்கோயிலூர்

### திருவருட்பா வில்லுப்பாட்டு:-

வழங்குபவர்கள்: தயவுதிரு இரவிசந்திரன் அவர்கள் மற்றும் சன்மார்க்க அன்பர்கள், செஞ்சி.

### திருவருட்பா பஜனை:- சன்மார்க்க அன்பர்கள், புதுவை.

**மஹா அன்னதானம் ஆன்மீக கண்காட்சி**

**திருவருட்பா இலவச புத்தகம் வழங்குதல்**

Vallalar Sanmarga Gnanamurasu, Tamil Monthly November 2018, RNI TNTAM/2007/21626 DRO.R.C./C3/74857/05
PR No.TRL/11/2017-19 Posted at Tiruvannamalai on 16th of every month,
WPP License No. TN/PMG(CCR)/WPP 582/2018-2019
Published on 15th of every month, Printed pages 28 ( including 4 cover pages).

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி

தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி



## வடலூர் மாதப்பூசம்

**27.11.2018** – கார்த்திகை 11 – செவ்வாய்

**24.12.2018** – மார்கழி 09 – திங்கள்

**20.01.2019** – தை 06 – ஞாயிறு – கொடியேற்றம்

**21.01.2019** – தை 07 – திங்கள் – தைப்பூசம்

**23.01.2019** – தை 08 – செவ்வாய் – திருவறை தரிசனம்

## திருவண்ணாமலை பௌர்ணமி கிரிவலம்



**22.12.2018** – மார்கழி 07 – சனிக்கிழமை

முன்தினம் இரவு 12:28AM முதல்

அன்று இரவு 12:28AM வரை

தொடர்புக்கு: **88385 40176, 63801 11475**

திரு/திருமதி

Redirect to : அருள்திரு **பாபு சாது**

**சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்**

552/6A, வாயுலிங்கம் எதிரில், கிரிவலப்பாதை, கோசாலை கிராமம், அடிஅண்ணாமலை (Po),
திருஅண்ணாமலை – 606 604. Cell : 94434 89849, 99427 76351

சந்தா பற்றிய விபரங்களுக்கு அணுகவும்: **+91 80126 80865**